**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் -1) - 2024**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கட்டம் -1) 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், மின்சக்தி மற்றும் வலு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்வலு உருவாக்கம், உபமின்நிலையத்திற்கு இணைக்கப்பட்டவை, உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு, முனனேற்றப்பட்ட வினைத்திறனான நடுத்தர வோல்டேச் வலையமைப்பு முன்னேற்றப்பட்ட வினைத்திறனான மின்வலுவுக்கான கேள்வி பக்க முகாமைத்துவ மற்றும் வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு போன்ற ஐந்து கூறுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன. வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,515 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,330 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,185 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 யூலையில் ஆரம்பித்திருந்ததுடன் 2020 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை 13 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கைகள் 05 கூறுகளை கொண்டுள்ளதுடன் மேல் மாகாணம் தெற்கு - 1 இற்கான விநியோக கட்டுப்பாட்டு நிலையத்திற்கு ஆதரவளித்த மேற்பார்வை கட்டுப்பாடு தரவு சுவீகரிப்பு (SCADA), நிரப்பப்பட்ட நீதேக்க நீரியல் செயற்திட்டம் மற்றும் பரிமாற றவலையமைப்பு வேண்டுகைகான உபபாகங்கள் மற்றும் கருவிகள் போன்ற பொருட்கள்/ உபகரணங்களின் கொள்வனவு என்று அழைக்கப்பட்ட ஏனைய 03 நடவடிக்கைகளும் கடன் பெறுகைகளின் சேமிப்பை பயன்படுத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்டன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **மொறக்கொல்ல நீரியல் மின்சார பொறி செயற்திட்டம்** | | |
| (i) | முன்னேற்ற அறிக்கை பிரகாரம் தயார்படுத்தல் வேலைகளிற்கான ஒப்பந்தம் 2018 மார்ச் 27 இல் வழங்கப்பட்டதுடன் இது 2020 மே 06 இல் பூர்த்தியாக்க்பட்டதுடன் பின்னர் இது 2021 நவம்பர் 10 வரை 05 தடவைகள் (EOTs) நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக வதிவிட முகாமின் நிலுவை வேலைகள் மற்றும் வீதி மாற்று வழிப்பாதை நிர்மாணம் என்பன 2024 ஆகஸ்ட் 29 இல் நிறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் பூர்த்தியாக்கப்படாமல் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 77 சதவீதம் மற்றும் 65 சதவீதமாக இருந்தது. | இந்த கூற்றுடன் உடன்படுகின்றோம். | முறையான கண்காணிப்பு அவதானிப்புகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | முன்னேற்ற அறிக்கை பிரகாரம், சிவில் வேலைகளிற்கான ஒப்பந்தம் 2019 ஒக்தோபர் 04 இல் வழங்கப் பட்டிருந்ததுடன் ஆரம்பத்தில் 2023 செப்தெம்பர் 14 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் பின்னர் 2024 செப்தெம்பர் 11 வரை மூன்று | இந்த கூற்றுடன் உடன்படுகின்றோம். | முறையான கண்காணிப்பு அவதானிப்புகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94 சதவீதமாக இருந்த பொதிலும் 80 சதவீத முன்னேற்றத்தை மாத்திரம் அடையப்பட்டிருந்த பொதிலும். 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முன்னேற்றம் 81 சதவீதமாக இருந்தது. | | |
| (iii) | முன்னேற்ற அறிக்கை பிரகாரம், எந்திரவியல் மற்றும் மின்சார வசதிகள் ஒப்பந்தம் 2020 மே 13 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பத்தில் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் இது 2025 ஆகஸ்ட் 24 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94 சதவீதமாக இருந்த பொதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 89 சதவீதமாக நிதி முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. | இந்த கூற்றுடன் உடன்படுகின்றோம். | முறையான கண்காணிப்பு அவதானிப்புகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | முன்னேற்ற அறிக்கை பிரகாரம், மொறக்கொல்ல நீர் மின்சார பொறி செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் மீளாய்வாண்டு இறுதியில் முறையே 84.8 சதவீதம் மற்றும் 84.3 சதவீதமாக இருந்தது. இதன் விளைவால், புகையேற்படும் எரிபொருள் மின்னுருவாக்கலை குறைப்பதன் மூலம் நீரியல் முன்னுற்பத்தியின் விருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கு கடந்த 10 ஆண்டுகள் நீண்ட காலத்தின் பொது செயற்திட்டத்தால் அடைய முடியாதிருந்ததுடன் கடந்த 05 ஆண்டு ஒப்பந்த காலப்பகுதிக்குள் ஆரம்பத்தில் பட்டியலிடப் பட்டிருந்தமை பொறியின் இயலளவு 30.5 MW வெளியீட்டிற்கு எதிர்பார்க்கப்பட்டது. அந்த செயற்திட்ட தாமதங்கள் நாட்டிற்கு இழப்பை ஏற்படுத்தக்கூடும். | மொறக்கொல்ல அணைக்கட்டு பகுதியில் லெபியோ- பிஸ்சரி (கடயா) என்ற உள்ளூர் மின் இனம் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் பல காரணிகளால் இந்த செயற்திட்டம் தாமதமடைந்தது. இது வடிவமைப்பு செயற்பாட்டை பாதித்தது. தற்போது இந்த செயற்திட்டம் 2025 திசெம்பர் 31 இற்குள் பூர்த்தியாக்கபபடும் என எதிர்பார்க்கப்பட்டது. | முறையான கண்காணிப்பு அவதானிப்புகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |
| (ஆ) | **(SCADA) செயற்திட்டம்** | | |
| | மேல் மாகாணம் தெற்கு - 1 இற்கான விநியோக கட்டுப்பாட்டு நிலையத்திற்கு ஆதரவளித்த மேற்பார்வை கட்டுப்பாடு தரவு | செயற்திட்டமானது யுனுடீ கடன் இல. 3147 இன் கீழான பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி | செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| சுவீகரிப்பு (SCADA), வடிவமைப்பு, உற்பத்தி, பரீட்சிப்பு, வழங்கல், பொருத்துதல், பூர்த்தியாக்கல் மற்றும் தொடங்குதல் ஒப்பந்தம் 2023 மே 17 இல் ரூபா 2,003.21 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5,945,117 + ரூபா 11.61 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 செப்தெம்பர் 05 இல் இலிருந்து 547 நாட்களிற்குள் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கபட்டது. பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கட்டம் -1) இன் சேமிப்பிலிரந்து செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.8 மில்லியன் ஒதுக்கீட்டில் ஐ.கடன் முடிவில் அ.டொலர் 3.43 மில்லியன் மற்றும் ரூபா 1.16 மில்லியன் மாத்திரம் கைதவிர்க்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், பெறப்பட்ட மன்னெற்ற அறிக்கை பிரகாரம் பௌதீக மன்னேற்றம் 95.6 சதவீதம் எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் 81 சதவீதமாக இருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முன்னேற்றம் 58 சதவீதமாக இருந்தது. | வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கட்டம் -1) இற்கு மாற்றப்பட்டிருந்தது.<br>அந்நேரத்தில் ஏனைய கடன் சேமிப்புகள் எதுவும் கிடைத்திருக்காததுடன் இந்த மாற்றம் நாட்டின் நலனிற்காக கடன் செமிப்புகள் அதிகூடியளவு பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டது. | வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கேள்வி ஆவணங்களின் 6 ஆம் பிரிவின் 5.9 ஆம் பந்தியின் பிரகாரம் ஐ.அ.டொலர் 3.76 மில்லியன் பெறுமதியில் SCADA / ADMS வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரயோகம் மற்றும் றிமோட் ரேமினல் பிரிவு என்பவற்றிற்கான முறைமை பரீட்சிப்பு மேற்கொள்வதற்கு வேண்டப்பட்டது. தொழிற்சாலை ஏற்பனவு பரீட்சிப்பு (FAT) மேற் கொள்வதற்காக தயார்ப்படுத்தல் குறித்து ஒப்பந்தகாரரால் 2024 சனவரி 09 இல் தெரிவிக்கப் பட்டிருந்ததுடன் 2024 மார்ச் இறுதி வரை ஒப்பந்தகாரருக்கு 17 நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்தது போதிலும் அத்தகைய FAT வேண்டப்பட்டவாறு மேற்கொள்ளப் | FATs இற்கான அனுமதி நடைமுறை 2024.02.08 இல் PMU ஆல் தொடங்கப் பட்டிருந்ததுடன் அனுமதிகளில் தாமதம் காரணமாக பல தடவைகள் மீள பட்டியலிடப்பட்ட பின்னர் அந்த FATs தெரிவு குழுவின் அனுமதி பெற்ற பின்னர் 2024.04.01 இற்கு மீளப் பட்டியலிடப்பட்டிருந்தது..<br><br>எவ்வாறாயினும், நியாயமான காலப் பகுதிக்குள் அமைச்சிடமிருந்த எவ்வித பதிலும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த செயற்திட்டம் 2024.07.13 இல் காலாவதியாவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ADB கடன் இல. 3147 ஆல் நிதியளிக்கப்பட்டிருந்தது என கருத்திற்கொள்ளப்பட்டதுடன் கடன் | ஒப்பந்தத்தின் தர உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதற்கு சொல்லப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுடன் கடுமையாக இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்காததுடன் 2024 மே 06 இல் CEB பொது முகாமையாளரால் FAT பதிவழிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆதலால் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக வேண்டப்பட்ட வன்பொருள் மற்றும் மென்பொருளின் பெறுமதி ஐ.அ.டொலர் 3.76 மில்லியன் தொகை தொழில் கொள்வோனால் பரிசொதனை மேற்கொள்வதற்கு பதிலாக தொழில் கொள்வோனின் ஒத்துழைப்புடன் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்படுகின்ற FAT அடிப்படையில் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | கடிதத்தின் கப்பலேற்றுகை இறுதி திகதி 2027.06.13 ஆக இருந்தது. ADB நிதிகளின் அதகூடிய பயன்பாடு மற்றும் வேலைத் தளத்திற்கு பொருட்களை உரிய நேரத்தில் விநியோகிப்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்த செயற்திட்டத்தின் கீழ் சகல FAT பதிவழிப்பதற்கு 2024.05.06 இல் CEB இன் GM இற்கு அறிவுறுத்தப்பட்டது. | |
| (ஆ) | ஒப்பபந்தத்தின் பொது நிபந்தனைகளின் 07 ஆம் பிரிவின் 18.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்குநர் ஒப்பந்தம் வழங்கல் அறிவித்தலின் 28 நாட்களிற்குள் மேற்குறித்த ஒப்பந்தத்திற்காக விசேட ஒப்பந்த நிபந்தனைகளில் (SCC) ஒப்பந்த தொகையில் மற்றும் குறித்த நாணயத்தில் ஒப்பந்த செயலாற்றலிற்கு செலுத்த வேண்டிய செயலாற்றல் பிணைமுறி வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய செயலாறறல் பிணைமுறி பொதி இல. 05, லொட் 04, உப லொட் C1 இன் கீழ் 245 kv மற்றும் 145 kv வெளிப்பகுதி சுவீச்சர்ஸ் வழங்கி விநியோகிப்பதற்காக 2023 சனவரி 23 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் வழங்கல் 54 நாட்களின் பின்னர் 2024 மார்ச் 19 இல் ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது | ஒப்பந்தமானது 2024.சனவரி 28 இல் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் வேண்டப்பட்ட கால அட்டவணைக்கு பின்னால் 50 நாட்களிற்கு தாமதத்துடன 2024 மார்ச் 19 இல் பிணைமுறி சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பிரச்சனையை குறைப்பதற்கு CEB செயலாற்றல் பிணைமுறி சமர்ப்பிக்கும் வரை தகுதியுடையதாக இருந்த ஒப்பந்தகாரால் பிணை முறி வழங்கப்பட்டிருந்ததென உறுதிபபடுத்தப்பட்டது. | ஒப்பந்த நிபந்தனைகளுடன் கடுமையாக இணங்க வேண்டும். |

**2.3 நிதிகளின் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ADB கடன் இல. 3146 இன் கீழ் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 29 மில்லியனில் நிலைபேறான சக்தி அதிகாரசபைக்கு கைதவிர்க்கப்பட்ட ஐ.அ.டொலர் 60,137 ஐ தவிர ரூபா 3,808.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18.11 மில்லியனும் ADB கடன் இல. 3147 இன் கீழ் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 121 | 2024 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அறிக்கை வழங்கிய பின்னர் மிகுதி தொகை மீளளிக்கப்பட வேண்டியிருந்தது. | கடன் பெறுகைகளை வினைத்திறனான வழியில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனில் ரூபா 27,684.44 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 101.46 மில்லியன் தொகை 10 ஆண்டு காலப்பகுதியின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், AFD கடன் இல. CLK 101105 M இன் கீழ் ஒதுக்கப்பட்ட யூரே 22 மில்லியனில் ரூபா 3,793 மில்லியனிற்கு சமமான யூரோ 20.62 மில்லியன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைதவிர்க்கப்பட்டிருந்தது. AFD கடனிலிருந்து பெறப்பட்ட முற்பணத்தில் ரூபா 96.43 மில்லியனிற்கு சமமான யூரோ 316,604.19 ஆனது 2023 திசெம்பர் 31 இல் நிதிகள் பயன்படுத்தல் காலாவதியாகி இருந்தமையால் பயன்படுத்தப்படாமல் கடனளிக்கும் முகவருக்கு மீளளிக்கப்பட வேண்டியிருந்தும் விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கில் இருந்தது. | | |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் GPDEEIIP –I இன் கீழ் மொறக்கொல்ல நீர் மின்சார செயற்திட்ட அமுலாக்கலின் நிர்மாணத்திற்காக ஐ.அ.டொலர் 113.86 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தங்கள் ஐ.அ.டொலர் 94.65 மில்லியனிற்கு கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. அதில் செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதப்பட்டிருந்தமையால் கடன் முடிவுறுத்தல் 84 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 79.76 மிலலியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குனுவதற்கு ADB இடமிருந்து இன்னொரு ஐ.அ.டொலர் 15 மில்லியன் பெறப்பட வேண்டியிருந்தது. | இந்த கூற்றுடன் உடன்படுகின்றோம் | கடன் பெறுகைகளை வினைத்திறனான வழியில் பயன்படுத்துவதற்கு பௌதீக முன்னேற்றத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (ERD) கூற்றின் பிரகாரம், ADB கடன் இல. 3147 இன் கீழ் ரூபா 283.41 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.41 மில்லியன் மற்றும் ரூபா 57.32 மில்லியனிற்கு சமமான யூரோ 322,030 கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் சார்பில் இலங்கை | கடன் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்டம் கடப்பாட்டு கட்டணங்களை ஏற்பட்டமை தவரிக்க முடியாதுள்ளது. | கடப்பாட்டுக் கட்டணங்களை குறைப்பதற்கு தாமதமில்லாமல் நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அரசாங்கத்தால் செலுத்தப்பட்டிருந்தது. ஆதலால் பாதீட்டு ஒதுக்கீடுகளில் ஏற்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்களின் பகுதி சிக்கனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.